©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 1.60 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 225A] சென்னை, புதன்கிழமை, ஜூலை 12, 2017
ஆனி 28, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

2017–ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 12–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

### சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2017

***1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபத்தெட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2017–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவு (திருத்தம்) சட்டம் என்று அழைக்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

தமிழ்நாடு சட்டம் 27/1975.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

2. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் இணைப்புப்பட்டியலில்,– இணைப்புப் பட்டியலின் திருத்தம்.

(a) 1 ஆம் இனத்தில், “இரண்டாயிரம் ரூபாய்” என்ற சொற்களுக்குப் பதிலாக, “நான்காயிரம் ரூபாய்” என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) 2 ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பதிலாக முறையே பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:-

Verified RealEstate™

| | |
|---|---|
| "2. (1) சங்கத்தின் முதல் நிதியாண்டின் போது ஆவணம் எதனையும் தாக்கல் செய்வதற்காக. | இருநூறு ரூபாய். |
| (2) சங்கத்தின் இரண்டாம் நிதியாண்டிலிருந்து ஆவணம் எதனையும் தாக்கல் செய்வதற்காக,- | |
| (i) முந்தைய நிதியாண்டின் போது சங்கத்தின் ஆண்டு வரவு அல்லது செலவு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும் போது; | நூறு ரூபாய். |
| (ii) முந்தைய நிதியாண்டின் போது சங்கத்தின் ஆண்டு வரவு அல்லது செலவு ஒரு இலட்சம் ரூபாய்க்கு மிகையாக இருந்து ஆனால் ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும் போது; | இருநூறு ரூபாய். |
| (iii) முந்தைய நிதியாண்டின் போது சங்கத்தின் ஆண்டு வரவு அல்லது செலவு ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மிகையாக இருந்து பத்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும் போது; | முன்னூறு ரூபாய். |
| (iv) முந்தைய நிதியாண்டின் போது சங்கத்தின் ஆண்டு வரவு அல்லது செலவு பத்து இலட்சம் ரூபாய்க்கு மிகையாக இருந்து ஆனால் பதினைந்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும் போது; | நானூறு ரூபாய். |
| (v) முந்தைய நிதியாண்டின் போது சங்கத்தின் ஆண்டு வரவு அல்லது செலவு பதினைந்து இலட்சம் ரூபாய்க்கு மிகையாக இருந்து ஆனால் இருபது இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்கும் போது; | ஐநூறு ரூபாய். |
| (vi) முந்தைய நிதியாண்டின் போது சங்கத்தின் ஆண்டு வரவு அல்லது செலவு இருபது இலட்சம் ரூபாய்க்கு மிகையாக இருக்கும் போது; | அறுநூறு ரூபாய்."; |

(c) 3 ஆம் இனத்தில் "இருநூற்று ஐம்பது ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நானூறு ரூபாய்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(d) 4 ஆம் இனத்தில் "இருநூற்று ஐம்பது ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐநூறு ரூபாய்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(e) 5 ஆம் இனத்தில் "பக்கம் ஒன்றுக்கு பத்து ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பக்கம் ஒன்றுக்கு இருபது ரூபாய்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(f) 6 ஆம் இனத்தில் "நூறு ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இருநூறு ரூபாய்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(g) 7 ஆம் இனத்தில் "ஆயிரம் ரூபாய்" என்ற சொற்களுக்குப் பதிலாக "இரண்டாயிரம் ரூபாய்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

Verified RealEstate™

**நோக்கக்காரண விளக்கவுரை**

1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழுள்ள (தமிழ்நாடு சட்டம் 27/1975) கட்டணங்களின் அட்டவணையானது, முன்னர் 2011–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் திருத்தியமைக்கப்பட்டது. கட்டணங்கள் கடைசியாகத் திருத்தியமைக்கப்பட்டதிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்டதாலும் தற்போது வசூலிக்கப்படும் கட்டணங்கள் பதிவுத்துறையினால் செய்யப்படும் சேவைகளுக்கு நிகராக இல்லாமல் இருப்பதாலும், பதிவாளருக்குச் செலுத்தத்தக்கக் கட்டணங்களைத் திருத்தியமைக்கும் நோக்கத்திற்காக, 1975–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழுள்ள (தமிழ்நாடு சட்டம் 27/1975) இணைப்புப் பட்டியலைத் திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவுக்குச் செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.சி. வீரமணி,**
*வணிகவரித் துறை அமைச்சர்.*

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு).*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.